# பிரபல பின்னணி பாடகர் கே.கே. மாரடைப்பால் மரணம்

## பிரதமர் மோடி இரங்கல்



**கொல்கத்தா, ஜூன் 1–**

**கொல்கத்தா இசை நிகழ்ச்சியில் பங்கேற்ற பிரபல பின்னணி பாடகர் கே.கே. திடீரென மரணமடைந்தார். அவரது மறைவுக்கு பிரதமர் மோடி உள்ளிட்ட அரசியல் தலைவர்கள் மற்றும் இசை பிரபலங்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.**

பிரபல பின்னணிப் பாடகர் கே.கே. என அழைக்கப்படும் கிருஷ்ணகுமார் குன்னத் (வயது 53). கிருஷ்ணகுமார் குன்னத் டெல்லியை பூர்வீகமாகக் கொண்டு தமிழ், இந்தி உட்பட பல்வேறு முக்கிய மொழித் திரைப்படங்களில் பல நூறு பாடல்களை பாடியுள்ளார். இதனால் அவருக்கு பல மாநிலங்களிலும் ஏராளமான ரசிகர்கள் உள்ளனர்.

இந்தநிலையில் நேற்று கொல்கத்தாவில் உள்ள குருதாஸ் நஸ்ரூல் மன்சா கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சுமார் 1 மணி நேரம் பாடல்கள் பாடியுள்ளார். அதன்பின்னர் அங்கிருந்து தான் தங்கியிருந்த ஓட்டலுக்கு வந்துள்ளார். அப்போது திடீரென மாரடைப்பு ஏற்பட்டு மயங்கி விழுந்தார். அதனையடுத்து, அவர் உடனடியாக கொல்கத்தாவில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அங்கு அவரை பரிசோதனை செய்த மருத்துவர்கள் அவர் உயிரிழந்துவிட்டதாக கூறியுள்ளனர். அவருடைய திடீர் மறைவு பலருக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

### சந்தேக மரணம்

பாடகர் கிருஷ்ணகுமார் குன்னத்தின் மரணம் இயற்கைக்கு மாறானது என கூறிய கொல்கத்தா புது மார்கெட் போலீசார் சந்தேக மரணமாக வழக்குப்பதிவு செய்துள்ளனர். கிருஷ்ணகுமார் குன்னத் தங்கியிருந்த ஓட்டலின் சிசிடிவி காட்சிகளை கைப்பற்றி போலீசார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். இதனால் உயிரிழந்த கிருஷ்ணகுமார் குன்னத் உடல் இன்று பிற்பகல் பிரேத பரிசோதனை செய்யப்பட உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

பிரபல பின்னணி பாடகர் கிருஷ்ணகுமார் குன்னத் மறைவுக்கு பிரதமர் மோடி உள்பட பல்வேறு தலைவர்கள், சினிமா பிரபலங்கள் மற்றும் அவரது ரசிகர்கள் தங்களது இரங்கலை தெரிவித்து வருகின்றனர்.

### பிரதமர் மோடி இரங்கல்

இதுதொடர்பாக பிரதமர் மோடி தனது டுவிட்டரில், "பிரபல பாடகர் கேகே என்று அழைக்கப்படும் கிருஷ்ணகுமார் குன்னத்தின் அகால மறைவு வருத்தமளிக்கிறது. அனைத்து வயதினரையும் கவர்ந்த அவரது பாடல்கள்பலவிதமானஉணர்ச்சிகளை பிரதிபலித்தன. அவரது பாடல்கள் மூலம் நாம் எப்போதும் அவரை நினைவில் கொள்வோம். அவரது குடும்பத்தினருக்கும் ரசிகர்களுக்கும் ஆழ்ந்த அனுதாபங்கள்" என்று பிரதமர் மோடி பதிவிட்டுள்ளார்.

பாடகர் கேகேவின் மறைவுக்கு துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடு, மத்திய மந்திரிகள் அமித்ஷா, அனுராக் தாக்கூர், கிரிக்கெட் வீரர் விரேந்திர சேவாக், இசையமைப்பாளர்கள் யுவன் சங்கர் ராஜா, ஹாரிஸ் ஜெயராஜ், பாடகர்கள் சோனு நிகம், ஸ்ரேயா கோசல் உள்ளிட்டோர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

கேரளத்து தம்பதிக்கு மகனாக பிறந்த கேகேவுக்கு மனைவி மற்றும் குழந்தைகள் உள்ளனர். இந்தியத் திரையுலகின் பல்துறைப் பாடகர்களில் ஒருவரான கே.கே. இந்தி, தமிழ், தெலுங்கு, கன்னடம் மற்றும் பெங்காலி உள்ளிட்ட பல மொழிகளில் பாடல்களைப் பதிவு செய்துள்ளார். தமிழில் இளையராஜா, ஏ.ஆர்.ரகுமான், யுவன் சங்கர் ராஜா, தேவா, வித்யாசாகர், மணி சர்மா மற்றும் ஹாரிஸ் ஜெயராஜ் ஆகியோர் இசையிலும் 66க்கும் மேற்பட்ட பாடல்களை கேகே பாடியுள்ளார். அதில் காதல் வளர்த்தேன் (மன்மதன்), அப்படி போடு (கில்லி), காதலிக்கும் ஆசை (செல்லமே), நினைத்து நினைத்து (7ஜி ரெயின்போ காலனி), உயிரின் உயிரே (காக்க காக்க), ஸ்ட்ராபெர்ரி கண்ணே (மின்சார கனவு), ஒல்லிக்குச்சி உடம்புக்காரி ( ரெட்) உள்ளிட்ட பாடல்கள் இதில் அடங்கும். பாடகர் கேகே திரைத்துறையில் அறிமுகமாவதற்கு முன்னர் 3,500 விளம்பரங்களுக்கு பாடல் பாடியுள்ளார்.

# பெட்ரோல், டீசல் விலையை குறைக்க வலியுறுத்தி போராட்டம்: பாஜக தலைவர் அண்ணாமலை உள்பட 5 ஆயிரம் பேர் மீது வழக்கு

**சென்னை, ஜூன் 1–**

**பெட்ரோல்,டீசல் விலையைக் குறைக்க வலியுறுத்தி தலைமைச் செயலகத்தை முற்றுகையிடும் போராட்டத்தில் ஈடுபட முயன்ற பாஜக மாநில தலைவர் அண்ணாமலை உள்ளிட்ட 5 ஆயிரம் பேர் மீது போலீஸார் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.**

பெட்ரோல், டீசல் மீதான மாநில அரசின் வரியைக் குறைக்க வேண்டும் என வலியுறுத்தி, தலைமைச் செயலகத்தை முற்றுகையிடப் போவதாக தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை அறிவித்திருந்தார். அதன்படி, சென்னை எழும்பூர் ராஜரத்தினம் மைதானம் அருகே நேற்று காலை ஏராளமான பாஜகவினர் திரண்டனர். அண்ணாமலை தலைமையில் அங்கு பாஜகவினர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தொடர்ந்து, தலைமைச் செயலகம் நோக்கிப் பேரணியாக புறப்பட்ட பாஜகவினரை போலீஸார் தடுத்து நிறுத்தினர். அண்ணாமலையுடன் போலீஸார் பேச்சுவார்த்தை நடத்தியதையடுத்து, கட்சியினர் கலைந்து சென்றனர். இந்தப் போராட்டத்தில், பாஜக மூத்த தலைவர் எச்.ராஜா, மாநில துணைத் தலைவர்கள் வி.பி.துரைசாமி, கரு. நாகராஜன், நாராயணன் திருப்பதி, மாநில செயலர் வினோஜ் பி.செல்வம் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

இந்நிலையில் சட்ட விரோதமாக கூடுதல், அரசு அதிகாரி உத்தரவை மீறி செயல்படுதல் உள்ளிட்ட 3 பிரிவுகளின் கீழ் பாஜக தலைவர் அண்ணாமலை, முன்னாள் தேசிய செயலாளர் ஹெச்.ராஜா உள்ளிட்ட 5000 பேர் மீது போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

# நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 8.7% ஆக உயர்வு

**டெல்லி, ஜூன் 1–**

**நாட்டின் ஜிடிபி எனப்படும் மொத்த உள்நாட்டு உற்பத்தி கடந்த நிதியாண்டில் 8.7% ஆக உயர்ந்துள்ளதாகவும் கடந்த மார்ச் காலாண்டில் 4.1% ஆக வளர்ச்சி கண்டுள்ளதாகவும் தேசிய புள்ளியியல் அலுவலகம் அறிவித்துள்ளது.**

நாட்டின் பொருளாதார வளர்ச்சி மார்ச்சுடன் முடிவடைந்த காலாண்டில் 4.1% ஆக அதிகரித்ததை அடுத்து கடந்த நிதியாண்டின் வளர்ச்சி 8.7% ஆக உயர்ந்து உள்ளது. இது இதற்கு முந்தைய நிதி ஆண்டில் 6.6% ஆக இருந்தது. இருப்பினும் இதற்கு முந்தைய நிதி ஆண்டின் மார்ச் காலாண்டில் வளர்ச்சி 5.4% ஆக உயர்ந்து இருந்தது. மத்திய புள்ளியியல் அலுவலகம் 2வது கணக்கில் கடந்த நிதியாண்டில் வளர்ச்சி 8.9% ஆக இருக்கும் என்று எதிர்பார்ப்பதாக அறிவித்து இருந்தது குறிப்பிடத்தக்கது.

இதனிடையே நாட்டின் முக்கிய 8 துறைகளின் வளர்ச்சி கடந்த ஏப்ரலில் 8.4% ஆக உயர்வை கண்டுள்ளது. இது அதற்கு முந்தைய ஆண்டை விட 62.6% அதிகமாகும். மேலும் கடந்த மார்ச் மாதத்தில் வளர்ச்சி 4.9% இருந்தது. 8 முக்கிய துறைகளில் நிலக்கரி, கச்சா எண்ணெய், இயற்கை எரிவாயு, பெட்ரோலிய சுத்திகரிப்பு பொருட்கள், உரம், உருக்கு, சிமெண்ட், மின்சாரம் ஆகியவை அடங்கும்.

கடந்த ஆண்டு ஏப்ரல் வளர்ச்சியுடன் ஒப்பிடும் போது, நடப்பாண்டு ஏப்ரலில் வளர்ச்சி அதிகரித்துள்ளது.


## NOTICE OF LOSS OF SHARE CERTIFICATES

Notice is hereby given that the below mentioned Share Certificate(s) issued by M/S Shriram Transport Finance Company Limited in our name has been lost/misplaced.

| Folio no | Certificate No. | Distinctive No | No. of Shares |
|---|---|---|---|
| 53311 | 352954 – 352956<br>454618 – 454623<br>556922 - 556927 | 15459769 – 15459918<br>22469208 – 22469507<br>31537948 - 31538247 | 150<br>300<br>300 |

Due notice thereof has been given to the Company and We have applied to the Company for the issue of Duplicate Share Certificate.

The public is hereby warned against purchasing or dealing in any way with the above Share Certificate. Any Person who has any claim in respect of the said Share Certificate(s) should lodge such claim with Shriram Transport Finance Company Limited, Sri Towers, 14A, South Phase, Industrial Estate, Guindy, Chennai – 600 032 or its Share Transfer Agents, Integrated Registry Management Services Private Limited, "Kences Towers", 2nd Floor, No.1 Ramakrishna Street, North Usman Road, T Nagar, Chennai – 600 017, within 15 days of publication of this notice, else the Company will proceed to issue duplicate certificate(s), without further intimation.

Place : CHENNAI
Date : 31/05/2022

SUSHILABEN PARIKH
101, AKASDEEP DUPLEX,
AMBAWADI, NR. SHREYAS CROSSING,
GUJARAT - 380 015.



## பெயர் மாற்றம்

Rama Chandran Devaraj, தந்தை பெயர் : Rama Chandran, பிறந்த தேதி: 02.05.1985, நெ.92/105, பஸ் ஸ்டாண்ட் மேட்டு தெரு, பஸ் ஸ்டாப் அருகில், மாம்பாக்கம் கிராமம், சாலூர் அஞ்சல், திருக்கழுக்குன்றம் தாலுக்கா, செங்கல்பட்டு மாவட்டம் – 603 109, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **Rama Chandran Muni Ammal Devaraj,** என்று அழைக்கப்படுகிறேன்.

Rama Chandran Devaraj

## பெயர் மாற்றம்

JAGARA BEGUM SHAKE AMEER, கணவர் பெயர்: Chan Basha, பிறந்த தேதி: 25.04.1980, நெ.25G/24, தில்லை நாயகம் பிள்ளை 5வது தெரு, செம்பியம், பெரம்பூர், சென்னை – 600 011, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **ZEHERA CHAN BASHA,** என்று அழைக்கப்படுகிறேன்.

JAGARA BEGUM SHAKE AMEER

## பெயர் மாற்றம்

Jaga Nath Fernando George Alexander Fernando, தந்தை பெயர்: Jaga Nath Fernando, பிறந்த தேதி: 26.06.1983, நெ.21–A, 4வது குறுக்கு தெரு , TELC Compount, அண்ணா நகர், செங்கல்பட்டு அஞ்சல், டவுன் தாலுக்கா, மாவட்டம் – 603 001, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **Jaganath Fernando George Alexander,** என்று அழைக்கப்படுகிறேன்.

Jaga Nath Fernando George Alexander Fernando

## பெயர் மாற்றம்

Hittesh Pradeep Mehta, தந்தை பெயர்: Pradeep Mehta, பிறந்த தேதி: 10.11.1998, நெ.11, கிருஷ்ணா நகர், மாதவரம் மில்க் காலனி, சென்னை – 600 051, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **HITESH MEHTA,** என்று அழைக்கப்படுகிறேன்.

Hittesh Pradeep Mehta

## NAME CHANGE

I, MOHAMED ANSARI SHEIK DAWOOD holder of **Indian Passport No: K8772942** issued at DUBAI on: 03/01/2013 and Permanent Resident of 8/106 WESTSTREET, DEVIPATTINAM RAMNAD, TAMILNADU and presently residing at OFFICE 201 MOHAMED AL MAKHAWI BLDG OUD METHA DUBAI do hereby change my name from **MOHAMED ANSARI SHEIK DAWOOD** to **SHEIK DAWOOD** with immediate effect

## பெயர் மாற்றம்

Mustaali Goolamalli Merhaba, தந்தை பெயர்: Gulamali Mulla Taiyebali Merhaba பிறந்த தேதி: 12.07.1953, ப.நெ.221, பு.நெ.200, லிங்கி செட்டி தெரு, 4வது மாடி, சென்னை – 600 001, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **Mustaali Gulamali Merhaba,** என்று அழைக்கப்படுகிறேன்.

Mustaali Goolamalli Merhaba

## பெயர் மாற்றம்

AYYADURAI SHOBANA, தந்தை பெயர் : Puthisigamani, பிறந்த தேதி: 01.07.1966, நெ.2–3–1 2–A கிழக்கு 3வது மாடி, Hansa Bellissimo 86–87, எருக்கஞ்சேரி ஹை ரோடு, எருக்கஞ்சேரி, சென்னை – 600 118, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **PUTHISIGAMANI SHOBANA,** என்று அழைக்கப்படுகிறேன்.

AYYADURAI SHOBANA

## பெயர் மாற்றம்

Jerry Champbell Johnson Lobo, தந்தை பெயர்: V.Johnson Lobo, பிறந்த தேதி: 20.01.1997, பு.நெ.67, ப.நெ.26/2, சியாளி முதலி தெரு, புதுப்பேட்டை, சென்னை – 600 002, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **Jerry Champbell Lobo Johnson Lobo,** என்று அழைக்கப்படுகிறேன்.

Jerry Champbell Johnson Lobo

## பெயர் மாற்றம்

Johnathan Dawson Miller, பிறந்த தேதி: 11.01.2012, ப்ளாட் நெ.06, தி ராயல் நெஸ்ட் அபார்ட்மெண்ட், 1வது தெரு, முகப்பேர் மேற்கு, ஜஸ்வந்த் நகர், அண்ணாமலை அவென்யு, சென்னை – 600 037, என்ற முகவரியில் வசிக்கும் எனது மகன் இனி **JONATHAN DAWSON MILLER,** என்று அழைக்கப்படுகிறார்.

**Vinoth Miller,**
தந்தை

## பெயர் மாற்றம்

TALLAM RENUKA, கணவர் பெயர்: M.Srinivasan, பிறந்த தேதி: 04.01.1995, F71/F78, அம்பேத்கர் தெரு, எம்எம்டிஏ காலனி, அரும்பாக்கம், சென்னை – 600 106, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **THALLAM RENUKA,** என்று அழைக்கப்படுகிறேன்.

TALLAM RENUKA

## பெயர் மாற்றம்

SUHAIL AHAMAD SHAIK, தந்தை பெயர்: Shaik Kamal Basha, பிறந்த தேதி: 02.04.1971, நெ.5, ஜலால்பேட் 2வது தெரு, 4வது குறுக்கு வாதி நகர், ஆம்பூர், வேலூர் – 635 802, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **Given Name: SUHAIL AHMED Sur Name: SHAIK,** என்று அழைக்கப்படுகிறேன்.

SUHAIL AHAMAD SHAIK



## NOTICE FOR LOSS OF SHARE CERTIFICATE

Notice is hereby given that the share certificate in respect of the under mentioned equity shares of Carborundum Universal Limited (CIN: L29224TN1954PLC000318) have been lost / misplaced and the holders of the said shares as mentioned hereunder are in the process of making application for the issue of duplicate share certificate in lieu of the original share certificate:

| FOLIO NO. | NAME OF THE SHAREHOLDERS (as in the records maintained with the Company) | CERTIFICATE NO. | DISTINCTIVE NOS. (FROM – TO) | | NO. OF SHARES HELD |
|---|---|---|---|---|---|
| CUL111073 | CViji Babu, V Jothi and C Sankar Babu | 2141 | 4001815 | 4002614 | 800 |

Any person having claims /objections or are in the possession of the above-mentioned share certificate, should communicate the same to investorservices@cumi.murugappa.com, vip_vinayaga@yahoo.com within a period of 15 days from the publication of this notice. After the expiry of period of 15 days from the publication of this notice, duplicate share certificate shall be issued to the concerned shareholders as mentioned above.

Date:31/5/2022
Place: Chennai



## மீனாட்சி எண்டர்பிரைசஸ் லிமிடெட்

CIN - L51102TN1982PLC009711

பதிவு அலுவலகம்: போர்ஷன் எண். எப், பழைய எண். 24, புதிய எண். 45, வெங்கட மேஸ்திரி தெரு, மண்ணடி, சென்னை–600 001.

**மார்ச் 31, 2022ல் முடிந்த காலாண்டு மற்றும் ஆண்டுக்கான தணிக்கையான நிதிநிலை முடிவுகள்**

(ரூ. லட்சத்தில்)

| வ எ ண் | விவரங்கள் | முடிந்த காலாண்டு 31.03.2022 (தணிக்கை யானது) | முடிந்த காலாண்டு 31.03.2021 (தணிக்கை யானது) | முடிந்த ஆண்டு 31.03.2022 (தணிக்கை யானது) | முடிந்த ஆண்டு 31.03.2021 (தணிக்கை யானது) |
|---|---|---|---|---|---|
| 1 | செயல்பாடுகள் மூலம் மொத்த வருமானம் (நிகரம்) | 18.67 | 20.61 | 63.50 | 170.62 |
| 2 | காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (வரி, விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு முன்) | -18.44 | -44.75 | 4.86 | -20.57 |
| 3 | வரிக்கு முன் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்) | -18.44 | -44.75 | 4.86 | -20.57 |
| 4 | வரிக்கு பின் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்) | -3.64 | -45.25 | 4.86 | -25.63 |
| 5 | நடப்பு காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (காலத்திற்கான லாபம்/நஷ்டம் (வரிக்கு பின்) மற்றும் இதர விரிவான வருமானம் (வரிக்கு பின்) ஆகியவற்றை உள்ளடக்கியது | -3.64 | -45.25 | 4.86 | -25.63 |
| 6 | சமபங்கு மூலதனம் | 1,240.00 | 1,240.00 | 1,240.00 | 1,240.00 |
| 7 | ரிசர்வுகள் (மறுமதிப்பீடு ரிசர்வுகள் நீங்கலாக) | - | - | - | - |
| 8 | பத்திரங்களுக்கான பிரீமியம் கணக்கு | 94.00 | 94.00 | 94.00 | 94.00 |
| 9. | நிகர மதிப்பு | 1,163.03 | 1,158.15 | 1,163.03 | 1,158.15 |
| 10 | செலுத்தப்பட்ட கடன் மூலதனம் / நிலுவையில் உள்ள கடன் | - | - | - | - |
| 11 | நிலுவையில் உள்ள மீட்டெடுக்கக்கூடிய முன்னுரிமை பங்குகள் | - | - | - | - |
| 12 | கடன் ஈக்விட்டி விகிதம் | - | - | - | - |
| 13 | ஒரு பங்கு சம்பாத்தியம் (தொடரும் செயல்பாடுகள்) (ஒவ்வொன்றும் ரூ.10/–) அடிப்படை மற்றும் பலமிழந்தது | -0.03 | -0.36 | 0.04 | -0.21 |
| 14. | மூலதன மீட்பு இருப்பு | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| 15 | கடன் பத்திர மீட்பு இருப்பு | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| 16 | கடன் சேவை கவரேஜ் விகிதம் | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| 17 | வட்டி சேவை கவரேஜ் விகிதம் | 0.00 | 0.00 | 0.00 | 0.00 |

குறிப்புகள்:

1. SEBI (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015, விதி 33ன் கீழ் ஸ்டாக் எக்சேஞ்சுகளில் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிதிநிலை முடிவுகளின் விரிவான வடிவத்தின் சுருக்கமாக மேற்கண்டவை உள்ளது.
2. நிதிநிலை முடிவுகளின் முழுமையான வடிவம் ஸ்டாக் எக்சேஞ் இணையதளம் www.bseindia.comல் உள்ளது.
3. கம்பெனிக்கு காலக் கடன் இல்லை, எனவே கடன் சேவை கவரேஜ் விகிதம் இல்லை.

**இடம்: சென்னை**
**தேதி: 30.05.2022**

**இயக்குனர்கள் குழு சார்பாக**
**ஜோஜு மடத்தும்பாடி ஜானி**



## மார்க் ப்ராஜக்ட்ஸ் அன்ட் இன்பிராஸ்டிரக்சர் லிமிடெட்

CIN: L65991TN1993PLC025252

பதிவு அலுவலகம் : ஸ்ரீ சாய் சபோதயா அபார்ட்மெண்ட்ஸ், தரை தளம், எண்.57/2பி, கிழக்கு கடற்கரை சாலை, திருவான்மியூர், சென்னை – 600 041

**31 மார்ச், 2022ல் முடிந்த காலாண்டு மற்றும் ஆண்டிற்கான தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை முடிவுகள் சுருக்கம்**

(ரூ. லட்சத்தில்)

| வ. எண் | விவரங்கள் | முடிந்த காலாண்டு 31 மார்ச், 2022 (தணிக்கை செய்தது) | முடிந்த காலாண்டு 31 மார்ச், 2021 (தணிக்கை செய்தது) | முடிந்த ஆண்டு 31 மார்ச், 2022 (தணிக்கை செய்தது) | முடிந்த ஆண்டு 31 மார்ச், 2021 (தணிக்கை செய்தது) |
|---|---|---|---|---|---|
| 1 | செயல்பாடுகள் மூலம் மொத்த வருவாய் (நிகரம்) | - | - | - | - |
| 2 | காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (வரி, விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு முன்) | (2.44) | (5.35) | (5.58) | (16.87) |
| 3 | வரிக்கு முன் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்) | (2.44) | (5.35) | (5.58) | (16.87) |
| 4 | வரிக்கு பின் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்) | (2.44) | (6.06) | (5.58) | (17.58) |
| 5 | காலத்திற்கான மொத்த விரிவான வருவாய் (காலத்திற்கான லாபம்/(நஷ்டம்) (வரிக்கு பின்) மற்றும் இதர விரிவான வருவாய் (வரிக்கு பின்) உள்ளடக்கியது) | (2.44) | (6.06) | (5.58) | (17.58) |
| 6 | சம பங்கு மூலதனம் | 544.50 | 544.50 | 544.50 | 544.50 |
| 7 | முந்தைய ஆண்டின் தணிக்கை செய்யப்பட்ட இருப்பு நிலைக்குறிப்பில் காட்டப்பட்டுள்ளபடி இருப்பு (மறுமதிப்பீட்டு இருப்பு நீங்கலாக | 1,027.26 | 1,032.83 | 1,027.26 | 1,032.83 |
| 8 | ஒரு பங்கு சம்பாத்தியம் (ஒவ்வொன்றும் ரூ.10/-) (தொடரும் மற்றும் நிறுத்தப்பட்ட செயல்பாடுகள்) | | | | |
| | a. அடிப்படை | (0.04) | (0.11) | (0.10) | (0.32) |
| | b. பலமிழந்தது | (0.04) | (0.11) | (0.10) | (0.32) |

குறிப்பு:

1. மேற்குறிப்பிட்டுள்ளவை செபி (பட்டியல் கடமைகள் மற்றும் பிற வெளியீட்டு தேவைகள்) ஒழுங்குமுறைகள் 2015, ஒழுங்குமுறை 33ன் கீழ் ஸ்டாக் எக்சேஞ்சில் தாக்கல் செய்யப்பட்ட தணிக்கை செய்யப்பட்ட தனியான காலாண்டு மற்றும் ஆண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் விரிவான வடிவத்தின் சுருக்கமாகும். காலாண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் முழுமையான வடிவம் ஸ்டாக் எக்சேஞ் இணையதளம் www.bseindia.com மற்றும் கம்பெனியின் இணையதளம் www.margprojects.com–ல் உள்ளது.

**மார்க் ப்ராஜக்ட்ஸ் அன்ட் இன்பிராஸ்டிரக்சர் லிமிடெட்டிற்காக**
**J மோகன்**
இயக்குனர்
DIN : 08309704

இடம் : சென்னை
தேதி : 30.05.2022



## எஸ் & எஸ் பவர் சுவிட்ச்கியர் லிமிடெட்

S&S POWER

**(CIN:L31200TN1975PLC006966),**

பதிவு அலுவலகம் : மனை எண். 14, சிஎம்டிஏ இன்டஸ்டிரியல் ஏரியா பகுதி-II, சித்தமனூர் கிராமம், மறைமலைநகர் - 603 209, காஞ்சிபுரம் மாவட்டம், இணையதளம் : www.sspower.com

**31.03.2022 அன்றுடன் முடிந்த காலாண்டு மற்றும் ஆண்டுக்கானக்கான தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை முடிவுகள் பற்றிய அறிவிப்பு**

ரூபாய் லட்சங்களில்

| வ. எண் | விவரங்கள் | தனிப்பட்டது: முடிந்த காலாண்டு 31-03-2022 (த.ஆனது) | தனிப்பட்டது: முடிந்த காலாண்டு 31-12-2021 (த.ஆகாதது) | தனிப்பட்டது: முடிந்த காலாண்டு 31-03-2021 (த.ஆனது) | தனிப்பட்டது: முடிந்த ஆண்டு 31-03-2022 (த.ஆனது) | தனிப்பட்டது: முடிந்த ஆண்டு 31-03-2021 (த.ஆனது) | தொகுக்கப்பட்டது: முடிந்த காலாண்டு 31-03-2022 (த.ஆனது) | தொகுக்கப்பட்டது: முடிந்த காலாண்டு 31-12-2021 (த.ஆகாதது) | தொகுக்கப்பட்டது: முடிந்த காலாண்டு 31-03-2021 (த.ஆனது) | தொகுக்கப்பட்டது: முடிந்த ஆண்டு 31-03-2022 (த.ஆனது) | தொகுக்கப்பட்டது: முடிந்த ஆண்டு 31-03-2021 (த.ஆனது) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | செயல்பாடுகளில் இருந்து மொத்த வருமாணம் | 114.65 | 99.05 | 131.98 | 393.81 | 404.30 | 3,028.68 | 2,701.92 | 4,714.02 | 11,151.88 | 13,327.47 |
| 2 | நடப்பு காலத்துக்கான நிகர லாபம் / (நஷ்டம்) (வரி, விலக்கு பெற்ற ரகங்கள் மற்றும் / அல்லது சிறப்பு ரகங்களுக்கு முந்தையது) | (7.18) | (31.55) | (46.02) | (94.34) | (110.09) | (447.59) | (323.27) | (27.06) | (1,543.66) | (171.35) |
| 3 | வரிக்கு முந்தைய நடப்பு காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்) (விலக்கு பெற்ற ரகங்கள் மற்றும் / அல்லது சிறப்பு ரகங்களுக்கு பிந்தையது) | (7.18) | (31.55) | (46.02) | (94.34) | (110.09) | (447.59) | (323.27) | (27.06) | (1,543.66) | (171.35) |
| 4 | வரிக்கு பிந்தைய நடப்பு காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்) (விலக்கு பெற்ற ரகங்கள் மற்றும் / அல்லது சிறப்பு ரகங்களுக்கு பிந்தையது) | (11.83) | (30.35) | (51.14) | (96.05) | (109.76) | (468.59) | (308.05) | (27.00) | (1,550.29) | (153.67) |
| 5 | நடப்பு காலத்திற்கான மொத்தம் விரிவான வருவாய் (நடப்பு காலத்துக்கான லாபம் / நஷ்டம் (வரிக்கு பிந்தையது) மற்றும் இதர விரிவான வாருவாய் (வரிக்கு பிந்தையது) ஆகியவற்றை உள்ளடக்கியது) | (29.08) | (26.01) | (33.76) | (100.27) | (92.38) | 64.62 | (297.98) | (156.35) | (1,004.93) | (221.60) |
| 6 | சமபங்கு மூலதனம் (முக மதிப்பு தலா ரூ.10/-) | 620.00 | 620.00 | 620.00 | 620.00 | 620.00 | 620.00 | 620.00 | 620.00 | 620.00 | 620.00 |
| 7 | ரிசர்வுகள் (மறுமதிப்பீட்டு ரிசர்வ் நீங்கலானது). | - | - | - | 488.93 | 589.18 | | | | (1,742.68) | (724.63) |
| 8 | பங்கு ஒன்றின் வருவாய் ( தலா ரூ.10/-) தொடர்ச்சியான மற்றும் தொடர்ச்சி இல்லாத செயல்பாடுகளுக்கானது | - | - | - | - | - | - | - | - | - | - |
| | a) அடிப்படை | (0.19) | (0.49) | (0.82) | (1.55) | (1.77) | (7.56) | (4.97) | (0.44) | (25.00) | (2.48) |
| | b) திட்பம் | (0.19) | (0.49) | (0.82) | (1.55) | (1.77) | (7.56) | (4.97) | (0.44) | (25.00) | (2.48) |

**குறிப்புகள் :** 1. நடப்பு ஆண்டின் போது முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு பொருட்களின் விலை உயர்வு காரணமாக லாபத்தின் அளவு படிப்படியாக குறைய முக்கிய காரணமாக உள்ளது.

2. COVID 19 சர்வதேச நோய் பரவுதல் காலக்கட்டத்தில் உலகலாவிய விநியோக சங்கிலி மேளாண்மை செயல்திறன் மீது இடையுறு காரணமாக இந்தியா மற்றும் U.K இருநாடுகளின் வியாபாரம் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தியது. கம்பெனியானது தற்போது செயலில் உள்ள நிலையான செலவுகளை குறைக்கவும் மற்றும் இலாபத்தின் விளிம்புகளைமேம்படுத்தவும் முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் இந்த ஆண்டின் இரண்டாவது காலாண்டின் முடிவுகளில் இருந்து பார்க்கலாம்.

3. மேற்குறிப்பிடப்பட்ட தனிப்பட்ட மற்றும் தொகுக்கப்பட்ட நிதிநிலை முடிவுகள் தணிக்கையாளர்கள் குழுவால் மறு ஆய்வு செய்யப்பட்டு பரிந்துறைக்கப்பட்டு 30-05-2022 அன்று நடைபெற்ற இயக்குனர்கள் குழு கூட்டத்தில் ஒப்புதல் பெறப்பட்டது.

4. மேற்குறிப்பிடப்பட்டவைகள் 2015-ம் வருடத்திய SEBI (பொறுப்புகளை பட்டியலிடுதல் மற்றும் தேவைகளை வெளிப்படுத்துதல்) விதிமுறைகளில் 133-வது விதிமுறை, விதி 3யின் கீழ், பங்கு வர்த்தக நிறுவனங்களில் தாக்கல் செய்யப்பட்டுள்ள காலாண்டு / ஆண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் விரிவான படிவத்தின் சுருக்கமான அறிக்கையாகும். மேற்சொன்ன காலாண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் முழுபடிவத்தையும் பங்கு வர்த்தக நிறுவனங்களின் இணையதளங்களில் காணலாம். 2013-ம் வருடத்திய கம்பெனிகள் சட்டத்தின் 133-வது பிரிவின் கீழும், 2015-ம் வருத்திய கம்பெனிகள் (இந்திய கணக்கியல் நெறியீட்டு முறைகள்) திருத்தப்பட்ட விதிமுறைகளின் கீழும், குறிப்பிடப்பட்டுள்ள இந்திய கணக்கியல் நெறியீட்டு முறைகளை ("Ind AS") பின்பற்றி கம்பெனியின் தனிப்பட்ட மற்றும் தொகுக்கப்பட்ட தணிக்கைசெய்ப்பபடாத நிதிநிலை முடிவுகள் தயாரிக்கப்பட்டுள்ளது.

5. கம்பெனியின் நிர்வாக செயல்பாட்டில் தோல்விகள் இருந்தபோதிலும் கம்பெனிக்கு நிதியுதவி தேவைப்படும்போது கம்பெனியின் புரமோட்டர்களின் உத்திரவாதத்தின் அடிப்படையில் இந்த கணக்கியல் முறை தயாரிக்கப்பட்டுள்ளது.

6. Ind AS 108 ல் வழங்கப்பட்டுள்ளபடி இந்தியா மற்றும் UK வில் குழுமத்தின் செயல்பாடுகள் புவியியல் பிரிவுகள் தனித்தனியாக வகைப்படுத்தப்பட்டுளது.

7. கம்பெனியானது பவர் பரிமாற்றம் மற்றும் வினியோகத்திற்கான மின் உபகரணம் உற்பத்தி என்கிற ஒரு தொகுப்பை மட்டும் செயல்படுத்திக் கொண்டிருக்கிறது.

8. மேற்குறிப்பிடப்பட்டவைகள் 2015-ம் வருடத்திய SEBI (பொறுப்புகளை பட்டியலிடுதல் மற்றும் தேவைகளை வெளிப்படுத்துதல்) விதிமுறைகளில் 33-வது விதிமுறை (3)(e), யின் கீழ் நடப்பு காலாண்டு மற்றும் ஆண்டுக்காண முடிவுகளை ஒப்பிட்டு பார்ப்பதற்காக தேவையான இடங்களில் முந்தைய காலாண்டுகள் மற்றும் ஆண்டுகளுக்கான முடிவுகள் மறுபிரிவு மற்றும் மறுசீரமைப்பு செய்து காட்டப்பட்டுள்ளது.

இடம் : சென்னை
தேதி : 30-05-2022

**எஸ் & எஸ் பவர் சுவிட்ச்கியர் லிமிடெடுக்காக**
ஒ-ம்/-
அசோக்குமார் விஷ்வகர்மா
நிர்வாக இயக்குனர்
DIN : 05203223



## படிவம் எண்.CAA2

(நிறுவனங்கள் சட்டம், 2013 பிரிவு 230(3) மற்றும் நிறுவனங்கள் (சமரசம், சீரமைப்பு மற்றும் ஒருங்கிணைப்பு)
விதிகள், 2016–ன் விதிகள் 6 மற்றும் 7–ன் கீழ்)

**தேசிய நிறுவன சட்டத் தீர்ப்பாயம் முன்பாக**
**சென்னை அமர்வு**
CA(CAA)/04/CHE/2022

நிறுவனங்கள் சட்டம் 2013 பிரிவு 230 – 232 வரையிலான விஷயத்தில்
மற்றும்
கனிங்ஹாம் வென்ச்சர்ஸ் பிரைவேட் லிமிடெட் (மாற்றப்படும் நிறுவனம் 1), சஹோஜ் வென்ச்சர்ஸ் பிரைவேட் லிமிடெட் (மாற்றப்படும் நிறுவனம் 2), வில்லிங்டன் வென்ச்சர்ஸ் பிரைவேட் லிமிடெட் (மாற்றப்படும் நிறுவனம் 3) மற்றும் மெர்கன்டைல் வென்ச்சர்ஸ் லிமிடெட் (மாற்றிக்கொள்ளும் நிறுவனம்) (''ஒருங்கிணைப்பு திட்டம்'') உடன் ஒருங்கிணைப்பு மற்றும் சீரமைப்பு திட்டம் தொடர்பான விஷயத்தில்

மெர்கன்டைல் வென்ச்சர்ஸ் லிமிடெட்
(CIN: L65191TN1985PLC037309),
நிறுவனங்கள் சட்டம் 1956–ன் கீழ் நிறுவனம் துவக்கப்பட்டுள்ளது
பதிவு அலுவலகம் : 88 மவுண்ட் ரோடு, கிண்டி, சென்னை – 600 032. ...மாற்றிக்கொள்ளும் நிறுவனம்

**மெர்கன்டைல் வென்ச்சர்ஸ் லிமிடெட்டின் சம பங்குதாரர்களின்**

**கூட்டம் குறித்த அறிவிப்பு விளம்பரம்**

அந்தந்த பங்குதாரர்கள் மற்றும் கடன் வழங்கியவர்களை ஒருங்கிணைக்கும் திட்டத்தை ('திட்டம்') பொருந்தும் பட்சத்தில் மாற்றத்துடனோ அல்லது மாற்றமில்லாமலோ பரிசீலிப்பதற்காக மெர்கன்டைல் வென்ச்சர்ஸ் லிமிடெட் (''நிறுவனம்'') பங்குதாரர்களின் கூட்டத்தை கூட்டுமாறு தேசிய நிறுவன சட்டத் தீர்ப்பாயம், சென்னை அமர்வு ஏப்ரல் 13, 2022 தேதியிட்ட உத்தரவு மூலமும், மே 13, 2022 தேதியிட்ட துணை உத்தரவு மூலமும் ஆணையிட்டுள்ளது என்று இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது.

மேற்கூறிய உத்தரவின்படி மற்றும் அதில் உள்ள வழிகாட்டுதலின்படி, மெர்கன்டைல் வென்ச்சர்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் சம பங்குதாரர்களின் கூட்டம் **ஞாயிற்றுக்கிழமை, ஜூலை 3, 2022 அன்று காலை 11:00 மணிக்கு காணொலி காட்சி ("VC")/ பிற ஆடியோ காட்சி முறையில் ("OAVM")** மூலம் நடைபெறும் என்று மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் நிறுவனத்தின் சம பங்குதாரர்கள் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கூறப்பட்டுள்ள ஒருங்கிணைப்புத் திட்டத்தின் நகல் மற்றும் பிரிவு 230–ன் கீழ் அறிக்கையின் நகல்களை நிறுவனத்தின் பதிவு அலுவலகத்தில் எந்தவித கட்டணமும் இல்லாமல் பெறலாம் அல்லது எழுத்துப்பூர்வ கோரிக்கையை cs@mercantileventures.co.in என்ற முகவரியில் சமர்ப்பிக்கலாம் மற்றும் நிறுவனத்தின் இணையதளமான https://www.mercantileventures.co.in/ மற்றும் பிஎஸ்இ லிமிடெட்டின் (BSE) இணையதளம் www.bseindia.com மற்றும் CDSL–ன் இணையதளம் www.evotingindia.com–ல் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். (i) தொலைதூர மின்னணு வாக்களிப்பு மற்றும் (ii) மின்னணு வாக்களிப்பு மூலம் மாற்றிக் கொள்ளும் நிறுவனத்தின் பங்குதாரர்கள் ஒருங்கிணைப்பு திட்டத்திற்கு வாக்களிக்க வேண்டும். கூட்டத் தேதிக்கு முன்னதாக வாக்களித்த பங்குதாரர்களுக்கு கூட்டத்தில் வாக்களிக்க உரிமை இல்லை. கூட்டத்தில் கலந்துகொண்டு வாக்களிக்கத் தகுதியுள்ள நபர்கள், வியாழக்கிழமை, ஜூன் 30, 2022 அன்று இந்திய நேரப்படி காலை 09:00 மணி முதல் ஜூலை 02, 2022 சனிக்கிழமை அன்று இந்திய நேரப்படி மாலை 05:00 மணி வரை தொலைதூர மின்னணு வாக்களிப்பின் மூலம் அல்லது கூட்டத்தின்போது வாக்களிக்கலாம். பங்குதாரர்களின் வாக்களிக்கும் உரிமையானது, கட் ஆப் தேதியான ஜூன் 27, 2022 அன்று, மாற்றிக் கொள்ளும் நிறுவனத்தின் செலுத்தப்பட்ட பங்கு மூலதனத்தில் அவர்களின் பங்கின் விகிதத்திற்கு ஏற்ப இருக்கும்.

தங்கள் மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்யாத/புதுப்பிக்காமல் காகித வடிவில் பங்குகளை வைத்திருக்கும் சம பங்குதாரர்கள், போலியோ எண், பங்குதாரரின் பெயர், பங்குச் சான்றிதழின் ஸ்கேன் செய்யப்பட்ட நகல் (முன் மற்றும் பின்), பான், ஆதார் அட்டை உள்ளிட்ட விவரங்களை cs@mercantileventures.co.in அல்லது பங்கு பரிமாற்ற முகவரின் investor@cameoindia.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். தங்கள் மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்யாத/புதுப்பிக்காத மின்னணு வடிவில் பங்குகளை வைத்திருக்கும் சம பங்குதாரர்கள், அவர்கள் மின்னணு கணக்குகளை வைத்திருக்கும் டெபாசிட்டரிகளுடன் தங்கள் மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்ய/புதுப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இந்த அறிவிப்பை அனுப்பிய பிறகு மாற்றிக்கொள்ளும் நிறுவனத்தின் பங்குதாரராகி, மின்னணு வாக்குப்பதிவுக்கான கட்ஆப் தேதி அன்று மாற்றிக்கொள்ளும் நிறுவனத்தின் பதிவேடுகளில் யாருடைய பெயர்கள் இடம் பெற்றுள்ளதோ, அவர் அறிவிப்பில் வழங்கப்பட்டுள்ளபடி தொலைதூர மின்னணு வாக்களிப்பின் வழிமுறைகளைப் பின்பற்றி மற்றும் கூட்டத்தின் போது மின்னணு வாக்குப்பதிவு மூலம் வாக்களிக்கலாம்.

மேற்படி கூட்டத்தின் ஏதேனும் ஒத்திவைப்பு (கள்) உட்பட அதற்கான தலைவராக திரு. S. மாணிக்கவாசகம் அவர்களையும், அவர் பங்கேற்காத நிலையில் நிறுவனத்தின் முழுநேர இயக்குனர் திரு. E.N. ரங்கசுவாமி அவர்களையும் மற்றும் மேற்கண்ட கூட்டத்திற்கான ஆராய்வாளராக **ரோகினி வர்மா K,** PCS அவர்களையும் தேசிய நிறுவன சட்டத் தீர்ப்பாயம் நியமித்துள்ளது. மேற்கூறிய திட்டம், கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டால், தீர்ப்பாயத்தின் அடுத்த ஒப்புதலுக்கு உட்பட்டதாகும்.

31 மே, 2022 தேதியிடப்பட்டது

S **மாணிக்கவாசகம்**
**கூட்டத்திற்காக நியமிக்கப்பட்ட தலைவர்**